பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 105

12.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தனிநபர் கைது

புகார்தாரர் திரு.ராமமூர்த்தி, சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், சேக்கடிப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது பெயரில் தனிப்பட்டா பெறுவதற்காக சேலம் மாவட்டம், சேக்கடிப்பட்டி கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். தனிப்பட்டா வழங்க பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.சரவணன், கிராம நிர்வாக அலுவலர் சேக்கடிப்பட்டி கிராமம், சேலம் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.4,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சேலம் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 12.10.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சரவணன், கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் உத்தரவின்படி திரு.மாதவன், தனிநபர் அவர்கள் ரூ.4,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

PRESS RELEASE – 105
12.10.2026

VILLAGE ADMINISTARTIVE OFFICER AND PRIVATE INDIVIDUAL ARRESTED FOR BRIBE

The complainant, Tr.Ramamoorthy, residing at Sekkadipatti Village, Pethanaickenpalayam Taluk, Salem District, had applied for the issuance of a separate patta in his name at the Office of the Village Administrative Officer, Sekkadipatti Village, Salem District. Tr.Saravanan, Village Administrative Officer, Sekkadipatti Village, Salem District, demanded a bribe of Rs.4,000 from the complainant for recommending the issuance of the separate patta. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Salem detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (12.10.2026). During trap proceedings, on the instruction of Tr.Saravanan, Village Administrative Officer, Tr.Madhavan, Private Individual demanded and accepted the bribe amount of Rs.4,000/- from the complainant. Both accused were arrested and sent to judicial custody.